தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31.5.2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலை மாணவர்களின் விழிப்புணர்வு பிரச்சாரம்**

நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாமின் நான்காம் நாளான இன்று மது மற்றும் புகையிலை எதிர்ப்புப் பேரணி, சுவர் ஓவியம், வீட்டுக் காய்கறித்தோட்டம், மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் வேளாண் சாகுபடியில் நவீன தொழில்நுட்ப உத்திகள் குறித்த கருத்தரங்குகள், கிராமத்துச் சிறுவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கோவை மாவட்டம் அன்னூர் தாலுக்கா, வெள்ளமடை ஊராட்சியில் கிராம ஊராட்சி அலுவலகத்திலிருந்து காலை 9.30 மணியளவில் 300 நாட்டுநலப்பணித் திட்ட மாணவர்கள் மது அருந்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த பதாகைகளை ஏந்தி முழக்கமிட்டும், பிரச்சாரங்கள் வழங்கியும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இப்பேரணி சுமார் 2 கி.மீ தொலைவு நடைபெற்றது. இப்பேரணியைத் தொடர்ந்து 10 மாணவர்கள் சாமநாயக்கன்பாளையம் பள்ளி சுவர்களில் குழந்தைகள் வன்கொடுமை தடுப்பு பற்றிய விழிப்புணர்வு ஓவியம் வரைந்தனர்.

மேலும், வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைத்தல் குறித்த கருத்தரங்கில், கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக காய்கறிப் பயிர்கள்துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் அ. சங்கரி அவர்கள் வீட்டுக்காய்கறித் தோட்டத்தின் முக்கியத்துவத்தையும், அதன் பயன்களையும் தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் மண்புழு உரம் தயாரிக்கும் முறையையும் அதன் முக்கியத்துவத்தையும் சுற்றுச்சூழல் துறையின் துணைப்பேராசிரியர் முனைவர் ர. சுனிதா விளக்கினார்.

மாலையில் உழவியல் துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் ந. தவபிரகாஷ் அவர்கள்வேளாண் சாகுபடியில் நவீன தொழில்நுட்ப உத்திகள், பயிர் சுழற்சி, மண் வளம் ஆகியன குறித்து ஆலோசனை வழங்கினார். அவர் ‘‘மண்ணிற்கு உரமிடம் வேண்டும் பயிரிக்கு அல்ல’’ என்று வலியுறுத்தினார். அதனை தொடர்ந்து வெள்ளமடை கிராம சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளும், கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

மக்கள் தொடர்பு அலுவலர்